## தமிழகத்தில் பிப்ரவரி மாதம் நடந்த

# தட்டச்சு தேர்வு முடிவுகளை வெளியிட வேண்டும்!

## தட்டச்சுக் கணினி பள்ளிகள் சங்கம் வலியுறுத்தல்!!

**நாகர்கோவில், ஜூலை 22**

தமிழ்நாடு தட்டச்சுக ணனி பள்ளிகள் சங்கம் சார்பில் தலைவர் செந்தில் தமிழக முதல் அமைச்ச ருக்கு ஒரு மனு அனுப்பி உள்ளார். அதில் அவர் கூறி யிருப்பதாவது:

கடந்த பிப்ரவரி மாதம் தொழில்நுட்பத் தேர்வு வாரியத்தின்மூலம் நடத் தப்பட்ட தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து, கணக்கி யல் தேர்வுக்கான முடிவு கள் இதுவரை வெளியிட வில்லை. இதன் விடைத்தாள்கள் கடந்த மார்ச் மாதம் முத ல்வாரத் திலேயே திருத்தி முடிக்கப் பட்டு விட்டன. சுமார் 150 நாட்களைக் கடந்தும் தேர்வு முடிவுகள் வெளியி டப்படாததால் மாணவர் கள் செய்வதறியாது தங்க ளது அடுத்தகட்ட கல்வியை மேம்படுத்த முடியாமல் குழப்பத்தில் தவிக்கின்றனர்.

இந்நிலையில் தட்டச்சு, சுருக்கெழுத்து தேர்வு களை எழுதியுள்ள மாண வர்கள் அரசுத்துறை பணி நியமன தேர்வுகளில்க லந்து கொள்ள இயலாமல் தவித்து வருகின்றனர். எனவே தமிழகஅரசு இதை கருத்தில் கொண்டு மாணவர்களின் நலன்க ருதி கடந்த பிப்ரவரிமாதம் நடந்த அரசு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுக்கான முடிவுகளை விரைந்து வெளியிட கேட்டுக்கொள் கிறோம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

# தட்டச்சு தேர்வு முடிவு வெளியிட கோரிக்கை

**சென்னை, ஜூலை 22–**

'பிப்ரவரி மாதம் நடந்த, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வு முடிவுகளை, உடனடியாக வெளியிட வேண்டும்' என, தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள் சங்கம், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் செந்தில் அறிக்கை:

தொழில்நுட்ப தேர்வு வாரியம் சார்பில், பிப்ரவரி மாதம், தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகள் நடத்தப்பட்டன.

இதில், 12 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றனர். தேர்வு விடைத்தாள், மார்ச் முதல் வாரத்திலேயே, திருத்தி முடிக்கப்பட்டு விட்டன. தேர்வு முடிந்து, 150 நாட்கள் கடந்தும், இதுவரை தேர்வு முடிவு, வாரியத்தால் வெளியிடப் படவில்லை.

சுருக்கெழுத்து தேர்வு முடிவுகளை, ஏப்ரலில் வெளியிட்டிருந்தால், சுருக்கெழுத்து தேர்வு எழுதி, அரசு வேலைவாய்ப்பை பெறும் முயற்சியில் உள்ள மாணவர்கள், அடுத்தகட்ட தேர்வுக்கு தயாராக வசதியாக இருந்திருக்கும்.

எனவே, தேர்வு முடிவுகளை, தொழில்நுட்ப தேர்வு வாரியம், உடனடியாக வெளியிட வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

ஏற்படுத்தியுள்ளது.

பிப்ரவரி மாதம் நடைபெற்ற

# அரசு தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் தேர்விற்கான முடிவுகளை வெளியிட வேண்டும்

## தமிழ்நாடு தட்டச்சு-கணினி பள்ளிகள் சங்கம் கோரிக்கை

நாகர்கோவில், ஜூலை 24

பிப்ரவரி மாதம் நடைபெற்ற அரசு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்விற்கான முடிவுகளை விரைந்து வெளியிட வேண்டும் என அரசுக்கு தமிழ்நாடு தட்டச்சு-கணினி பள்ளிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் மாநிலத் தலைவர் எல்.செந்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

### பிப்ரவரி மாதம் தேர்வு

கடந்த பிப்ரவரி 2020ம் மாதம் தொழில் நுட்பத் தேர்வு வாரியத்தின் மூலம் நடத்தப்பட்ட தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வில் சுமார் 1.50 லட்சத்திற்கும் மேலான மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். இதன் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் அனைத்தும் மார்ச் மாதம் கொரோனா ஊரடங்கிற்கு முன்னதாகவே திருத்தி முடிக்கப்பட்டுவிட்டன. தமிழகத்தில் ஒரே ஒரு மையத்தில் மட்டும் மிகச் சொற்ப அளவிலான விடைத்தாள் திருத்தாமல் இருந்து அதுவும் 1 மாதத்திற்கு முன்பாகவே திருத்தி முடிக்கப்பட்டுவிட்டன.

### முடிவுகள் தெரியாமல்

இந்த நிலையில் தேர்வு முடிவுகள் 4 மாதங்களைக் கடந்த நிலையிலும் இன்னும் தேர்வு முடிவுகள் தேர்வு வாரியத்தால் வெளியிடப்படவில்லை. இதனால் தேர்வு எழுதிய லட்சக்கணக்கான மாணவர்கள் முடிவுள் தெரியாமலும், அரசு வேலைவாய்ப்பினை பெறும் முயற்சியில் தங்களது அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி செய்வதறியாது குழப்பத்தில் இருக்கின்றனர். மேலும் தேர்ச்சி முடிவுகள் வெளிவருவதில் காலதாமதமாகின்ற காரணத்தினால் அடுத்து சான்றிதழ் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டு வர இருக்கின்ற அரசுத் தேர்வாணையத் தேர்விற்கு தகுதி பெற முடியுமா? என்ற அச்சமும் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளது.

### பிளஸ் 2 தேர்வு முடிவு

இந்த கொரோனா சூழ்நிலையில் தாமதமாக விடைத்தாள் திருத்தும் பணி துவங்கினாலும் 8 லட்சத்திற்கும் மேலான மாணவர்கள் கலந்து கொண்ட 12ம் வகுப்பு பொதுத் தேர்வின் விடைத்தாள்கள் அனைத்தும் திருத்தப்பட்டு அதன் முடிவுகள் சமீபத்தில் தமிழக அரசால் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 2020ம் மாதம் நடைபெற்ற அரசுத் தட்டச்சு சுருக்கெழுத்து தேர்வு முடிவுகளை எதிர்நோக்கி தேர்வு எழுதிய லட்சக் கணக்கான மாணவ, மாணவியர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

### முடிவுகளை வெளியிட

எனவே தமிழக அரசு இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் நலன் கருதி கடந்த பிப். 2020ம் மாதம் நடைபெற்ற அரசு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்விற்கான முடிவுகளை விரைந்து வெளியிட தொழில்நுட்பத் தேர்வு வாரியத்தினை வலியுறுத்த வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தட்டச்சு தேர்வு முடிவுகள் எப்போது வெளியிடப்படும்?

## மாணவர்கள் எதிர்பார்ப்பு



**நாகர்கோவில், ஜூலை 23:** தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள் மாநில தலைவர் செந்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தொழில் நுட்ப வாரியத்தின் மூலம் கடந்த பிப்ரவரி மாதம் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வு நடைபெற்றது. இதில் 1.50 லட்சம் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதன் விடைத்தாள்கள் அனைத்தும் மார்ச் மாதம் கொரோனா ஊரடங்கிற்கு முன்னதாக திருத்தி முடிக்கப்பட்டு விட்டன. தேர்வு முடிந்து 4 மாதங்களை கடந்த நிலையில் இன்னும் தேர்வு முடிவுகள் தேர்வு வாரியத்தால் வெளியிடப்படவில்லை.

இதனால் தேர்வு எழுதிய மாணவர்கள் முடிவு தெரியாமலும், அரசு வேலை வாய்ப்பினை பெறும் முயற்சியில் தங்களது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து செய்வதறியாது குழப்பத்தில் இருக்கின்றனர். தேர்ச்சி முடிவுகள் காலதாமதம் ஆவதால், அடுத்து சான்றிதழ் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டு, வர இருக்கின்ற அரசுத் தேர்வாணையத் தேர்விற்கு தகுதி பெற முடியுமா என்ற அச்சமும் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளது. இந்த கொரோனா சூழ்நிலையில் தாமதமாக விடைத்தாள் திருத்தும் பணி தொடங்கினாலும் 8 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட 12ம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டு விட்டன. எனவே தமிழக அரசின் தொழில் நுட்பத் தேர்வு வாரியம் தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்விற்கான முடிவுகளை விரைந்து வெளியிட கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தட்டச்சு தேர்வு முடிவுகள் எப்போது வெளியிடப்படும்?

## மாணவர்கள் எதிர்பார்ப்பு

நாகர்கோவில், ஜூலை. 24-

தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள் மாநில தலைவர் செந்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தொழில்நுட்ப வாரியத்தின் மூலம் கடந்த பிப்ரவரி மாதம் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வு நடைபெற்றது. இதில் 1.50 லட்சம் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதன் விடைத்தாள்கள் அனைத்தும் மார்ச் மாதம் கொரோனா ஊரடங்கிற்கு முன்னதாக திருத்தி முடிக்கப்பட்டு விட்டன. தேர்வு முடிந்து 4 மாதங்களை கடந்த நிலையில் இன்னும் தேர்வு முடிவுகள் தேர்வு வாரியத்தால் வெளியிடப்படவில்லை.

இதனால் தேர்வு எழுதிய மாணவர்கள் முடிவு தெரியாமலும் அரசு வேலை வாய்ப்பினை பெறும் முயற்சியில் தங்களது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து செய்வதறியாது குழப்பத்தில் இருக்கின்றனர். தேர்ச்சி முடிவுகள் காலதாமதம் ஆவதால், அடுத்து சான்றிதழ் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டு, வர இருக்கின்ற அரசுத் தேர்வாணையத் தேர்விற்கு தகுதி பெற முடியுமா? என்ற அச்சமும் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளது. இந்த கொரோனா சூழ்நிலையில் தாமதமாக விடைத்தாள் திருத்தும் பணி தொடங்கினாலும் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டு விட்டன. எனவே தமிழக அரசின் தொழில்நுட்ப தேர்வு வாரியம் தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்விற்கான முடிவுகளை விரைந்து வெளியிட கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாலைமலர் நாகர்கோவில் 24-7-2020 ★★★

# தட்டச்சு, சுருக்கெழுத்து தேர்வு முடிவுகளை வெளியிட வேண்டும்

## தமிழக அரசுக்கு கோரிக்கை

ஈரோடு, ஜூலை.23-

தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள் சங்கம் சார்பில் மாநில தலைவர் எல்.செந்தில் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழ்நாட்டில் மாநில தொழில்நுட்ப தேர்வு வாரியம் மூலம் கடந்த பிப்ரவரி மாதம் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் தேர்வுகள் நடத்தப்பட்டன. சுமார் 1½ லட்சம் பேர் இந்த தேர்வுகளை எழுதினார்கள். விடைத்தாள்கள் அனைத்தும் கடந்த மார்ச் மாதம் முதல் வாரத்திலேயே திருத்தப்பட்டு உள்ளன. தேர்வுத்தாள்கள் திருத்தும் பணி முடிந்து 150 நாட்களை கடந்த பிறகும் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படாமல் உள்ளன. தற்போதைய நிலையில் தட்டச்சு சுருக்கெழுத்து படிக்கும் மாணவ-மாணவிகள் அரசுத்துறை வேலை வாய்ப்புகளுக்காக படிக்கிறார்கள். அவர்களுக்கு தேர்வு முடிவு வந்தால் மட்டுமே அடுத்த கட்டமாக என்ன செய்வது என்ற முடிவு எடுக்க முடியும். இந்த கொரோனா ஊரடங்கு காலத்திலும் பிளஸ்-2 பொதுத்தேர்வு முடிவுகளை அரசு வெளியிட்டு உள்ளது. அது போல தேர்வு விடைத்தாள்கள் திருத்தும் பணி முடிந்து தாயார் நிலையில் உள்ள தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் தேர்வு முடிவுகளையும் உடனடியாக வெளியிட தமிழக அரசும், தொழில்நுட்ப தேர்வு வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் சங்க மாநில தலைவர் செந்தில் கூறி உள்ளார்.

## தட்டச்சு, சுருக்கெழுத்து

# கணக்கியல் தேர்வு முடிவு எப்போது?

**கோபி, ஜூலை 23–**

"தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வு முடிந்து நான்கு மாதங்களை கடந்தும், அதன் முடிவுகள் வெளியிடப் படவில்லை," என, தமிழ்நாடு தட்டச்சு–கணினி பள்ளிகள் சங்க மாநில தலைவர் செந்தில் கூறினார்.

இதுகுறித்து, அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில், கடந்த பிப்ரவரியில் தொழில்நுட்ப வாரியத்தின் மூலம் நடந்த, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வில் ஒன்றரை லட்சம் தேர்வர்கள் பங்கேற்றனர். இதன் விடைத்தாள்கள் அனைத்தும், ஊரடங்கு அமலாகும் முன்பே, மார்ச் மாதத்தில் திருத்தி முடிக்கப் பட்டுள்ளது.

தேர்வு முடிந்து நான்கு மாதங்களை கடந்தும், அதன் முடிவுகள் தேர்வு வாரியத்தால் வெளியிடப் படவில்லை. இதனால், தேர்வெழுதிய லட்சக்கணக்கான மாணவர்கள், அரசு வேலைவாய்ப்பு பெறவும், அடுத்தகட்ட நகர்வுக்கும் வழியின்றி குழப்பத்தில் உள்ளனர். தேர்வு முடிவுகளில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், சான்றிதழ் பெறுவதிலும் தாமதமாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால், தேர்வாணைய தேர்வுக்கு, தகுதி பெற முடியுமா என்ற அச்சமும் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளது.

கொரோனாவால், தாமதமாக விடைத்தாள் திருத்தும் பணி துவங்கினாலும், எட்டு லட்சம் தேர்வர்கள் பங்கேற்ற, பிளஸ் 2 தேர்வு முடிவுகள் சமீபத்தில் வெளியிடப் பட்டது. எனவே, தமிழக அரசு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுக்கான முடிவுகளை விரைந்து வெளியிட, தொழில்நுட்ப வாரியத்தை வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.